# சித்திரை 16

## 108 ஞானானுபவம்!
## 6 நீதிக்கதைகள்!!

### இதழ் 1





பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா

# சித்திரை 16



## 108 ஞானானுபவம்!
## 6 நீதிக்கதைகள்!!


### இதழ் 1

## பொருளடக்கம்


1. பகவான் கை பதுமையாக இருக்க 2
2. பேச்சை குறைப்பது 3
3. காமத்தை அழிப்பது 4
4. வெறுப்பு வேண்டாம்; நிறைவு வேண்டும் 5
5. கோபத்தை குறைத்து அழிப்பது 6
6. ஆசையை குறைத்து அழித்தல் 7
7. போட்டி பொறாமையை நாசம் செய்தல் 8
8. ஆரம்ப நம் சாதனையை மட்டும் பெருக்க 9
9. ஆவரண மயக்கத்தை ஒழிக்க 10
10. விட்க்ஷேப கலக்கத்தை போக்க 11
11. பணிவே பாதை 12
12. பொறுமையே கவசம் 13
13. நம்பிக்கையே நண்பன் 14
14. வைராக்கியமே ஸ்ரீஸத்குரு 15
15. சிரத்தையே சிரவணம் 16
16. மனதின் திறமை 17
17. அறிவின் கூர்மை 18
18. வினையின் எழுச்சியும் வீழ்ச்சியும் 19
19. விதியின் சதி 20
20. பேரறிவின் மௌனம் 21
21. மண்ணின் மஹிமை 22
22. ஜலத்தின் பெருமை 23
23. அக்கினியின் தகிப்பு 24
24. வாயுவின் அசைவு 25
25. ஆகாயத்தின் ஈர்ப்பு 26
26. மனதின் எண்ணமும் வினையின் பின்னலும் 27
27. வினையின் பின்னலும் விதியின் விளையாட்டும் 28
28. மனதின் கேள்வியும் விதியின் பதிலும் 29
29. விதியின் விளையாட்டும் ஸ்ரீபகவானின் கருணையும் 30
30. ஸ்ரீபகவானின் கருணையும் பேரறிவின் வருகையும் 31
31. பேரறிவின் வருகையும் ஜீவன் முக்தியும் 32
32. நாமரூபம் தோன்றிய விதம் 33
33. நாமரூபம் விளையாடும் விதம் 34

3௪. நாமரூபம் நாசமாகும் விதம் 35
35. நாமரூப ஜீவ பந்தம் எது? 36
36. நாமம் என்றால் என்ன? ரூபம் என்றால் என்ன? 37
37. இறைவனை தேடு இரையை தேடாதே 38
38. அவனைப் பணிவது உன் கடமை
உன்னை காப்பது அவன் கடமை 39
39. விதியை (நின்) மதியால் வெல்லாம் ௪0
௪0. வல்லான் வகுத்ததே வாய்க்கால் ௪1
௪1. ஆத்திரம் அறிவு நாசம் ௪2
௪2. கோபம் பாபமறியாது ௪3
௪3. கொடுத்ததை வாங்குகிறாய் வாங்கியதை கொடுக்கிறாய் ௪௪
௪௪. நீ கொன்றவை உன்னை கொல்லும ௪5
௪5. நம்பினார் கெடுவதில்லை ௪6
௪6. உள்ளம் உருக்கமும் கண்ணீர் பெருக்கமும் ௪7
௪7. பகவானுக்கு நாம ரூபம் கொடுப்பது ஏன்? ௪8
௪8. அந்த ஒன்றாக ஆவதற்கு தடையாக இருப்பது எது? ௪9
௪9. நாமமெல்லாம் கடந்து எங்கும் நிறைவாய் நின்றவன்
என்றால் என்ன? 50

எல்லாம் நீ!



ஸத்தியவாக்கு (1)

ஸத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்!"

"ஸ்ரீ ஸத்குரு திருவடி துணை!"

"நம்பினோர் கெடுவதில்லை!"

"தெய்வம் மனுஷ்யாணாம்!"

"யத் பாவம் தத் பவதி!"

"ஸ்ரீ ராம் ஜெய ராம் ஜெய ஜெய ராம்", ...... ஓம்!

"அகம் பிரம்மம், ஜகம் பிரம்மம் அகமேயெல்லாம்!"

"ஜெகம், பரமம், ஜீவர்களும், சிறிதும் இல்லை!"

"அடங்கி நடந்தால், சாதனை!"

"அடக்க நினைத்தால் { சோதனையும் வேதனையும் உண்டும்



உ

ஸ்ரீபகவானின் (2)
கைபதுமை/
யாக இருப்பது என்றால்,
முழு சரணாகதி நிலை
யால், ஜீவனை இரிவாமல் செய்யும்

# சர்வார்ப்பணம் ஆகும்.

(1)

# ஸ்ரீபகவான் கை/பதுமையாக/

இருக்கப் பழகிக் கொண்டவர்களுக்கு.
இன்பதுன்பம் இல்லை. ஆனந்தம் ஒன்றே உண்டு
வந்த வினைமட்டும் கழியும். வேறு எந்த,
சொந்த, பந்த வினையும், ஒட்டாது.
நிலை கண்டு **பதமுக்தி**/ அவஸ்யம் உண்டு.
**வல்வினைகள்**/ இருந்து, தொடர்வ
தாக இருந்தால், வலிமை குன்றலாம்.
அல்லது சற்று முன்/பின் மாற்றி அமைத்து
செயல் இழக்கச் செய்யலாம். இவ்வாமல்
நாசம் செய்ய முடியாது. **ஆகாமியம்**/
அவஸ்யம் பற்றாது. இதனால் **ஜீவன்முக்தி**
பெற முடியாது. என்பதே ரகசியம்.



இ பேசப் பேசப்! பிழை! ③

என்பதை உணரவும். பேச்சு நீர் அடர்ந்த காடாகும். உள்ளே புகுந்தால் (பேசிக் கொண்டே இருந்தால்) வெளியே வர முடியாது. பேச்சை நிறுத்த முடியாது. அதனால் **கடும்** விழி தொடரலாம்.

②

# பேச்சை குறைப்பது:—

பத்து வார்த்தை பேசும் நிலையில், இரண்டு! வார்த்தை பேசி, பேச்சை குறைக்கலாம். கண்ணால் காண்பதையும்! காதால் கேட்பதையும்! இதுவே **உண்மை!** என எண்ணி நம்பி உடனே பேசாமல், நிலை கண்டு, சில விநாடிகளோ, சில நிமிடங்களோ, **இறைக்கு!** உணர்வோடு அடங்கி இருந்து, அது உணர்ந்து! தாம் அடங்கிய நிலையில், சிறிதளவு பேசலாம். அவசரம்! ஆவேசம்! ஆத்திரம்! படபடப்பு! உள்ள நிலையில், வாயை **மூடுவதும்!** இயலவில்லையானால், சற்று விலகி இருப்பதும், மனத்தெளிவு ஏற்படும் போது, சற்று பேசவும் பேச்சை குறைக்கும் நிலையாகும். வீண் வார்த்தையும்! நையாண்டி (கேலி) வார்த்தையும் தற்புகழ்ச்சி வார்த்தையும்; பிறரை குற்றம் குறையாக பேசுவதும்; கேட்பதுவும்; தவிர்க்கலாம். இது பேச்சை குறைப்பதாகும்.



உ

(4)

பெண்களிடம் நம் (அன்பர்கள்) நாணே! என நெருங்க வேண்டாம். உன் அன்பர் தாவமில்ல ஆத்மா அசை." ஆகவே அத்யாவஸ்யம் இல்லாமல் பேச்சோ! கொடுக்கல் வாங்கலோ! நெருங்கிய பழக்க வழக்கமோ, நீ பக்குவம் பெறும் வரை வேண்டாம்.

(3)

# காமத்தை அழிப்பது:—

ஹரே ராம்! என்ற மந்திர நாமா! சர்வ சதா ஓடிக் கொண்டிருக்க வேண்டும். உன்னுடைய பெண்களைத் தவிர, அன்னிய பெண்களிடம், அவஸ்யம் அல்லாது, பேச்சு! கொடுக்கல் வாங்கல்! எந்த அளவுக்கு (உணவு வகைகள்) குறைக்க முடியுமோ, அந்த அளவுக்கு குறைக்கவும். வேறு எந்த பெண்களையும் (அன்பர்களையும்), காணும் நிலையில், திருவடி! ஒன்றை தவிர, வேறு அங்கங்களை நோக்காதே. காம விகார புஸ்தகம்! பேச்சு! இவைகள் ஒழி! முடிந்ததை எண்ணி வருந்தாதே! நவமே என எண்ணு! (பொறுமை பணிவு வேண்டும்.) நல்வழியை நலம் பெறுவாய்." !



ஒவ்வொரு தாவங்களையும்

பொருள்களையும், 5

காணும் போதும்,

கொடுக்கல் வாங்கல்

பண்ணும் போதும்:

ப து மை க ள்

வினையை வைத்து, மண்ணில்

பண்டமாற்று வர்த்தகம் செய்கின்றன.

இங்கு ஆசையோ! தேவையோ! இல்லை. எல்லாம் நவமேனாளது.

4

**விரக்தி** என்னும்: **வெறுப்பு** வேண்டாம்.

மாறுத **போதும்** என்ற **நிறைவு** வேண்டும்.

முன் பூர்வ ஜன்மங்களில், எல்லாம் அனுபவித்து விட்டோம் என்ற ஆரண நிறைவை! எந்த விஷயமும், ஒவ்வொரு செயல்களிலும்! பெற வேண்டும்.

**நாமரூபமாக!** நாளும் அழியும் **மண்தானே?**

நிறைய சாப்பிட்டு விட்டோம்.

,, பார்த்து ,,

,, பேசி ,,

,, கேட்டு ,,


,, கொடுத்து, வாங்கி ,,

,, தொட்டு அனுபவித்து ,,

என்ற திட உணர்வு மேலோங்க வேண்டும்.

உங்கள் பாஷையில், எமோஷன் / டென்ஷன் என்ற **உணர்ச்சிகள்** குறைந்து நாசமாக வேண்டும்.

விகாரகாட்சியும் / விவகாரபிரச்சினையும் வேண்டவே வேண்டாம்.



(6)

நீ உன் மட்டில்
ஆக்கிரம் வேகம்
இல்லாமலும் பிறரை
கண்டு கொள்ளாமலும்!
கண்டிக்காமலும்!
உன் மட்டில் அடங்கினால்
உன் வைரி ஏவின்!
உன்னை நம்பியவர்களை
வெற்றியபாதையில் அழைத்து

(5) மட்டும்! செல்லும். போதியாதே. சாதியமாக.

கோபத்தை குறைத்து அழிப்பது!
உங்கள் வாழ்க்கைப் பாதையில், உங்கள் வினை!
குறுக்கிடுபவரால்; சற்று சீறு! ஆனால், விடுக்கை செலுத்த வேண்டாம்.

அவரவர் வினையை, அவரவர் பரிமாறுகிறார்கள்.
ஆனால் நம் வினைபரிமாற்றத்தில், ஆக்கிரம்!
அவசரம்! வேகம்! வேண்டாம் என, நாம்!
நம் மட்டில், அடங்கி: சாதனை நமக்கே!

எதிராளிக்கு, அவ்வளவை உணர்ந்து, பேச்சிலும்:
செய்கையிலும்: கொடுக்கல் வாங்கல்களிலும்:
பொறுமை! நிதானம்! விட்டுக் கொடுத்து நாம்!
விலகல்! எதிராளியை நீ போன்ற ஏவக்காதிருத்தல்!

எல்லாம் நலமே! எல்லாம் நலமே! என்ற சாந்தி
அமைதி! திருப்தியாக ஏற்றுக்கொண்டால் போதும்.
கோபம் அழியும்.



ஆசையை குறைத்தால்
வேகம்! (7)
குறையும்
வேகம் குறைந்தால்,
கர்மா அழியும்.
அழியும் என்றால் வலிய
கர்மாவும் இருக்கும்.
முக்கியமாக கர்மாவின் அவஸ்தைகள்
முழுமையாக குறையும்.

(6)

ஆசையை! குறைத்து குறைத்து அழித்தல்!
எல்லாம் நீயே! என்ற ஒரு மந்திரத்தால்தான்!
ஆசைகள் நிர்மூலமாகும். எல்லாம் அவன் செயல்!
அவன் பொருள்! அவன் இயக்கம்! என்பது வாய்
ஞானம்! மாக இருக்கக்கூடாது. அனுபவ
,, ,, இருக்க வேண்டும்.

தேவை! கள் குறைந்தால்! ஆசை கள் குறையும்.
ஆசை! ,, ,, தேவை! ,,

நமக்கென
இருப்பதிலும்! வருவதிலும்! நடப்பதிலும்! இது
போதும்பிரபோ! என்று உருக்கு
பிரார்த்திக்க வேண்டும்.
எது! எவர்! எவள்! மீது! அதிருப்தியோ!
அவைகளை விலக்கவாம்! குறைக்கவாம்.
பின் அவை நாசம் ஆகும். பிரியம் வைத்தவை நிறுத்தும்.



ஞானியாளர்களும்
உங்கள் ஞானியின்
காவத்தையும்
பிறர் ஞானியின்
காவத்தையும்
கணக்கு பார்த்தால்

8

அவசியம் உண்டாகும்
போட்டி & பொறாமை / முற்கவனத்தில் இருக்கவும்.
மறை காணமல்

7

போட்டி & பொறாமையை / நாசம் செய்ய:-

இவ்விரண்டிற்கும் முற்கவனம் / சக்தியே காரணம்.

தற்கவனம் / சக்தி இல்லாமையே ஆகும்.

அவரவர் வினையின் வழி, அவரவர் அனுபவிக்கின்றனர். இதற்கு அவர்களும் பொறுப்பல்ல. கருணையே வடிவான, ஸ்ரீபகவானும் ! பொறுப்பல்ல. அவரவர் பாசப்பிணைப்பான மனமே ! காரணம் ஆகும்.

இங்கு உண்மையும் பாசப் ! பிணைப்பால், சிக்காமல்

(முற்கவன சக்தியில் சிக்காமல்) முன் தேடியதை ! இப்பொழுது அனுபவிக்கிறோம். இப்போது தேடுவதை, பின்னால் அனுபவிப்போம். நமக்கு எந்த வினையும் வேண்டாம். வந்த வினை முடிந்தால் போதும் என, எல்லோரும் நல்லவர்களே ! நடப்பதும் நலமே என, நாம் அடங்கியிருந்தால் போதும். போட்டி பொறாமை இராது.




**(9)**

உருகி அழுதால் ஆனந்தம் எப்படி பெற முடியும்? என கேட்கிறீர்களா? மனம் உருகி அழும்போது உள்ளம் கழுவப்படுகிறது அதனால் தோஷங்கள் நாசமாகும். அங்கு சத்வ குணம் தோன்றி நிலவும். அச் சத்வத்தை அனுபவமே ஆனந்தமயமாகும் என உணர்க.

**(8)**


**நம் சாதனை** மட்டும் பெருக:— விடியவும்! அடையவும்! உண்பதும் உறங்குவதும் சொந்த பந்த பாசத்தால், கொஞ்சுவதும் குலாவுவதும் வேலை! வேலை! வேலை! பணம்! பணம்! பணம்! குடும்பம், குழந்தை, குட்டிகள்! என **செக்கு** மாடு போல்! சுற்றிச்சுற்றி வருவதும், காட்டுமாடு போலவே ஓடி ஓடியும், ஆடி ஆடியும், தேடி தேடியும், நாம் தேடியது எல்லாம், பிறவியின் **கர்மா** தானே? அதனால் இன்ப துன்பமும்! ஜனன மரண மும் தானே? ஒரு விநாடியேனும் **ஆனந்தம்** அனுபவித்தது உண்டா? **வாழ்** நாளெல்லாம் **வீணாகி** விட்டதே! என உன் இறை குருவிடம்! மனம் உருகி! கண்ணீர் பெருகி! மனம் நைந்து! அழுது, அதனால், ஆனந்தம் அடைவதே சாதனை ஆகும்.



நாம ரூப ஆவரண
மயக்கம் என்பது:—
நான்! என்றல்! (10)
எ ன து!
என்ற ஜீவகர்த்தத்து
வத்தாலும்; உடைமை
உரிமை பாராட்டும்
அதிகார ஆதிக்கத்தாலும்
உண்டாகும் மறைமய போதை மயக்க
ஆவரண நாம ரூபங்களாகும்.

(9)

**ஆவரண மயக்கத்தை!** ஒழித்து:
ஆவரணம் என்றால், **நாமரூபம்!** ஆகும்.
இக ஜீவர்கள், பொருட்கள், பண்டங்கள்! அனைத்தும்
ஆவரணமே. இவைகளை, உற்றுணர்ந்து நோக்கில்,
எல்லாம் **மண்ணே!** மேலே கூறிய,
எல்லாம் பதுமைகளாக கண்டாலும்! மேலும்
அவைகளை, மண்மயமாகவே உணர்ந்தாலும்!
ஆவரண மயக்கம் நாசம் ஆகும். மேலே கூறிய
அனைத்தையும், ஸ்ரீ பகவான் உடைமையாகவும்!
அவன் இயக்கமாகவும்! கண்டால், எல்லாம்
பதுமைகளாக மாறிவிடும் இது சத்தியம். மேலே
கூறிய அனைத்தும், பரமாக உணர்ந்தால்! அனைத்தும்
**மண்ணாகி!** விடும். மேலே கூறிய அனைத்தையும்,
உடைமை & உரிமைகளை நாசம் செய்தால், போதும்.
ஆவரண மயக்கம் நாசம் ஆகும்.



ஜீவ (11)
கர்த்ருத்வம் ஒழிந்தாலே போதும்.
உடைமை உரிமை! இல்லாதவன் நான் எல்லாம் ஜடமாகி விடும் பிரம்மார்ப்பணத்தால்.

(10) ஈச கர்த்ருத்வமும் நாசமாகும் போது, எல்லாம் மண்ணாகி விடும். அதனால் விக்ஷேப கலக்கம் ஒழியும்.

## விக்ஷேப கலக்கத்தை போக்க:-

விக்ஷேப கலக்கம் என்பது, சந்தேக குற்றமாகும். இச்சந்தேக குற்றமானது, நாம ரூப ஆவரண மயக்கத்தினால் உண்டாவதாகும். இச்சந்தேக குற்றத்தை நீக்க, இருவழிகள் உண்டு.

(1) சர்வார்ப்பணத்தால்! ஸ்ரீ பகவானிடம்! முழுமையாக, எல்லாம் நீயே! என ஒப்படைத்து விட்டால்! உடைமை உரிமை! இல்லாமையாலும் அவன்! ஸ்ரீ பகவானுடைய, உடைமையும் உரிமையும்! ஆகிவிட்ட தன்மையினாலும், நாம ரூபம் ஜடம்! என ஆகிவிடும்.

(2) ஸ்ரீ பகவான் திருமையினால் பெற்ற, ஸ்ரீ ஸத்குரு திருமையினால், பிரம்மார்ப்பணம்! அப்யாஸம் இயல்பாகும். இந்தப்பிரம்மார்ப்பணத்தினாலும், நாமரூபம் செயலிழந்து ஜடம்! என ஆகிவிடும். பின் இயல்பாகவே! அதன் யதார்த்தமாகிய, மண் என ஆகிவிடும்.


இவ்விரு மார்க்கங்களினாலும் தான், விக்ஷேப கலக்கத்தை! ஒழிக்க முடியுமே யல்லாது, வேறு மார்க்கம் இல்லவேயில்லை.



உள்ளம் (12)
உடல்
இவ்வாறன்றே!
ஒன்றாக இணைய வேண்டும்
அந்நியமாய் உடல்
நாணல் புல்லைப் போல்
வளைந்து பணிந்தால்
வினையும் இயல்பாக முடியும்

(11) மனமும்! உயர்ந்து பக்குவப்படும்.

பணிவே பாதை!:- இங்கு
சொல்லும்! செயலும்! இனிதே பணிவாகும்.
அன்பையும்! அடக்கத்தையும்! உயர்வாக!
கருதுவதும்! பேசுவதும்! பணிவு ஆகும்.
இனி பணிவு என்பது
உடல்! பணிவதைக் குறிக்கும். இதனை
சாஷ்டாங்கமாகவோ! மண்டியிட்டோ! நின்றுகொண்டு
பணிந்து நமஸ்காரம் செய்வதாகும்.
இப்படி பணிந்து நமஸ்காரம் செய்யும்போதும்
நமஸ்காரம் செய்பவரும் இறைகுரு உணர்வோடு!
இருக்க வேண்டும். நமஸ்காரம் வாங்குபவரும்!
இறை குரு! உணர்வோடு இருக்க வேண்டும். நீ!
சொல்லாலும்! செயலாலும்! பணியும் போது உன்!
உள்ளம் பண்படுகிறது. அதனால் இறைகுரு!
திருவை என்னும் கருணை! யின் பாத்திரமாகும்
உன் உள்ளத்தை காலமே வந்து நிரப்பி விடுகிறது.
இதனால் விதி அழிகிறது. மனம் பக்குவப்படுகிறது.




# பொறுமையே கவசம்:—

பொறுமைக்கும் எல்லை உண்டு, என்று ஓர் எல்லையை வகுப்பார்கள் அறிவிலிகள். ஆனால் பொறுமைக்கு எல்லையே இல்லை என்பதே அறிவாளிகளின் ஸ்வய அனுபவம் ஆகும். ஆகவே இப்பொறுமையை! சொல்லும் போது:- பிறர் குற்றம் குறை! தப்பு தவறு! செய்வதாக நீ உணர்ந்தால், அவைகளை!

(A) மறந்துவிடு (மறக்கப் பழகு) மன்னித்து விடு. (மன்னிக்கப் பழகு) அவர்களுக்கு விட்டுக் கொடு. எதையும், சகிப்புத்தன்மையோடு, ஏற்றுக் கொள்.

(B) நம்மனதிற்கு, இது ஓர் பயிற்சி! என்றோ; அல்லது நம் வினை கழிகிறது என்றோ; நம் பொறுமையால் அவரும் யோசிக்கப் பழகுகிறார் என்றோ; நீயே! பொறுமையின் ஸாக்ஷியாக இருக்கையில், எதிராளியும் அவசியம் சீக்கிரமாகவும்! உன் ஸத்குருதேவமாகவும்! மாறி காட்டும் பெரு ரகஸியமாக்கும் ஆகும்.



ஆவரண (நாமரூப) மயக்கமே சந்தேகத்திற்கு காரணம் ஆகும். அந்த நாமரூபத்தை நான் (ஜீவ) நீ (ஜீவ) என போட்டி போட்டு மற்றவரால் அதை அனுபவிக்கும் தன்மை சந்தேகப்பட்டே ஆக வேண்டும்.

# நம்பிக்கையே நண்பன் :-

நம்பிக்கை என்பது, இக்கலியுகத்தில் மட்டும் சோதனையும்! வேதனையும்! தரும் காலம் போல்! காட்சி! அளிக்க வேண்டும் என்பதே, கலிதர்மமாகும்.

இதன் காரணம் (ஆறாவது உண்மையறிவு) துவைதபயமே ஆகும்.

இதன் காரணம் நாமரூப! ஆவரண மயக்கம் ஆகும்.

இதன் காரணம் நாமரூப! உரிமை & உடைமை பிடிப்பாகும்.

இதன் காரணம் நான்/எனது! பாடாக ஜீவ கர்த்தத்துவம் ஆகும். இங்கு உன் மனம்! லௌகீகமோ! தெய்வீகமோ! இரண்டு! பட்டதன்மையால், இருண்டு போய்விடுகிறது.

சர்வார்ப்பணத்தின்! நம்பிக்கையினால் தான், துவைத பயம் நீங்கும்.



உன் வினையை வைத்து சோதனையும்! வேதனையும்! சுருளுகை போல் ஓர் தோற்றம் தெரியும். அது உண்மை அல்ல. அது உன் வைராக்கியத்தை ஸ்திரப் படுத்தும் இறையை வென்று உணர வேண்டும்.

15

14

# வைராக்கியமே

ஸ்ரீ ஸத்குரு:—

முன் பக்கத்தில் கூறிய நம்பிக்கையில் பூ.....ர.....ண வைராக்கியம் வேண்டும்.

உன் ஸ்ரீ ஸத்குரு எதை போதிக்கிறாரோ, அவ் வாக்கியத்தை, உறுதியாக பற்றும், வைராக்கியமே, ஜீவன் முக்தி ஆகும். அவ் வைராக்கியத்தை, நிலை குலையச் செய்யும் நிகழ்வாக சோதனையும்! வேதனையும்! உன் **வினையை** வைத்து, சிவ காரியம் நடைபெறுவதைப் போல், தோற்றும் (அது உண்மையல்ல உன் மனப்பிரமை ஆகும்)

அங்கு ஸ்ரீ பகவன் நாமாவோ! ஸ்ரீ குருதேவா என்ற குருநாமாவோ! உருகி கண்ணீர் மல்கி, சிவனடிகள் அழைப்பதுவே! சாதகனின் முதிர்ச்சி ஆகும். இங்கு வைராக்கியம் பாதுகாக்கப்படும். அதுவே ஸத்குரு ஆகும்.



ஸத்குருவின் ↑ சிரத்தையே

இருது! 16

ஆகும் என உணர்வாயாக.
இங்கு உன் ஸத்குருவின்
உபதேசமே விந்து ஆகும்.
அதில் தோன்றும் ஞானமே
கர்ப்பம் ஆகும். அக்கர்ப்பம் இன் இருதே
ஆனந்தம் ஆகும்.


15

# சிரத்தையே சிரவணம்:-

சிரத்தை என்பது ஸத்குரு வாய் மொழியாக கேட்பதிலும்;
அதி அதி அதி அதி
வரிவடிவில் படிப்பதிலும்:

## க.........வ.........ன.........ம்! வே.........ண்.........டு.........ம்!!

சாதனை செய்ய வந்தோமே தவிர, வாழ வரவில்லை
சாதனை செய்யும் போது, நம் வினையும் மனமும்
முடிந்து நாசமானால் தான் ஜீவன் முக்தி
பெற முடியும். ஆகவே நம் சாதனை காலங்களில்
வினை அழியும் நிலையிலும் மனம் அழியும் நிலை
யிலும் நம் வினையின்படி, சோதனை & வேதனை
வந்தே தீரும். அதை சகிப்பதுமே நலமே என
ஏற்பதுவுமே **சாதனை** ஆகும். என்பதை மனதில்
கொண்டு, ஸ்ரீ ஸத்குருவின் அனுபவ போதனைகளை
சிரத்தையுடன் ஏற்பதே சிரவணம் ஆகும்.



நாம ரூப தோற்றங்களையும்
ஜீவ சொரூபங்களையும்
உடைமை & உரிமை
நான் எனது என்பதும்
என்பதும் பின்னிப் பிணைந்து
மோதுவதும்! அழுவதும்!
மகிழ்வதும்! அப்படியே விளையாடி
களிப்படைவது, மனதின் திறமை ஆகும்.

(17)

(16)

# மனதின் திறமை! :—

மாயாவின் மைந்தன் மனம். மாயா தோற்றத்தை! மற்றும், உண்டு பண்ணியது. அதன் மனம் (மாயாவால்) அந்தத் தோற்றத்தில், **நாமரூபங்களை!** உண்டு பண்ணி! இது இன்னது! இன்ன செய்யும்! இது இன்னார்! இவர்கள் என்ன செய்வார்கள்! இவர்கள் இன்னதை! உடைமை & உரிமை! பாராட்டிடல் நான், **காரசாரமாக!** விளையாடலாம் என்ற ஓர் திட்டத்தை வகுத்தது.

**சந்தேக குற்ற கற்பனைகளை!** உண்டாக்கி, எதை எதில் பிணைத்தால், விளைவு பெருகும் எதை எதால் மோத விட்டால், தோஷம் பெருகும் என்ற **திறமை!** யான திட்டம் வகுத்து, அந்தத் திட்டத்திற்கு, ஏதுவாக **நான் எனது!** பற்றியது

மனதின் திறமை ஆகும்




நன்மை தீமை (18)
புண்ணிய பாபம்
படித்தவன் படிக்காதவன்
பெரியவர் சிறியவர்
நல்லவன் கெட்டவன்
ஞானி அஞ்ஞானி! பக்தன்
பாமரன் இவை அனைத்தும், நாம ரூப குண
பேதங்களாக இவை பிரிந்து நிற்பதை உணர்வது அறிவு.

(17)

# அறிவின் கூர்மை:—

அசைந்தால் மனம்! அசைவை நிறுத்தினால் அறிவு!
நாமரூப குணம் சரியாக, சுட்டிக்காட்டினால் மனம்.
அவைகளை, சாட்சியாக பார்த்துக் கொண்டே
இது நம்முடைய மாயாவும், நம்முடைய மனமும்,
இணைந்து பிணைந்து, விளையாடுகின்றன என்று,
அவைகளை, கண்டுக்காமலும், கண்டிக்காமலும்,
விளையாட்டை, விளையாட்டாகவே பார்த்துக்கொண்டு
**வினையின்!** பாதிப்பு இல்லாமல், குழந்தைகள்
விளையாட்டை, பெற்றோர் ரசித்து பார்ப்பது போல்,
பார்த்துக் கொண்டிருப்பது அறிவாகும்.
குழந்தைகள் சண்டை போடும் பின் கூடிக் கொள்ளும்
அதில் பெற்றோர், புகுந்தால் அழகும் அல்ல பெருமையும் அல்லவே.
எப்படியாவது **பூசி!** வரும்போது, நம்மிடம் வந்தே
ஆகவேண்டும். நம்மை விட்டால், அவர்களுக்கு
**கதிமோட்சம் ஏது?** என சாட்சியாக
குழந்தைகள்மீது, கூர்ந்து இருந்திடு! யாதொன்றும் செய்யாது இருப்பது அறிவாகும்.



19

தேவை & ஆசை!

ஆசை & தேவை

என ஒரே பிரிவில் மனம் சிக்கிக் கொண்டு தன்மையால் ம றை எழுச்சியும்! வீழ்ச்சியும்! ஏற்படுகிறது என உணர்க.

18

இனிப் போதும்! என்ற நிறைவு உண்டானால் எழுச்சியும் வீழ்ச்சியும் அற்ற ஆனந்தம் உண்டாவதே.

வினையின்! எழுச்சியும்! வீழ்ச்சியும்!


இது மனதின்! சந்தேக உற்ற கற்பனையால்! தோன்றிய, புண்ணியம் & பாவம்! ஆகும் என அறிக. இவைகளை நல்வினை! தீயவினை! என்று சொல்லுவோம்.

சமுத்திரத்தில், அலைகள்! எப்படி தோன்றுகிறதோ! அதே போல், ஆசை! என்ற காற்றில், தேவை! என்ற அலைகள்! எழுச்சியாக சிக்கி கொண்டே இருக்கும்.

தேவையும் ஆசையும் நிறைவேறினால் எழுச்சி ஆகும்.

" " நிறைவேற வில்லையானால் வீழ்ச்சி ஆகும்.

இவ்விரண்டுமே, வினையின்! பா தி ப் பு! உணராமல் எனு மனம் வேகத்தோடு ஓடியிருப்பதால் உரை முடிவதில்லை. மனதின் வேகம் அடங்குகிறது. எழுச்சியும் வீழ்ச்சியும் இல்லாமல் மனதையும் மனம் பார்க்கவாடையும், சர்வார்ப்பணம்! பண்ணுதல் மட்டுமே, மனதின் ஆட்டமும்! வினையின் ஓட்டமும்! சர்வநாசம் ஆகும்.



தேடுபவனை தேடு — 20
நினைப்பாய்.
தேடுவதும் நின்னை
மதிகெட்டவனும் நின்னை
என்றறியாய். உன்!
மனமே தேடியது என உணர்
மனம் தேடாமல்! விதி நடக்காது! உன்
மனதில் இதை உணர்ந்தோர் பொறுமை வேண்டும்.

19

# விதியின்! ச.........தி:

## (சாமர்த்தியம்)

மனதின் சந்தேகத்தால் கர்மவினையால், வினை பெருகும்

அவ் **வினையை!** வைத்து **விதி!** விளையாடும்.

இந்த விதியின் விளையாட்டை, அறிவாளிகள் இது விதியின் சதி என்பர்.

உன் மனதாலேயே, வினையை தேடினையே. அவ்வினை வைத்துக்கொண்டே விதி! விளையாடி களிக்கிறது.

அதனாலேதான், வினை கழிகிறது?

இதை இப்படி எண்ணலாமே!

நம் மனதை, பின்பற்றியதால், வினை பெருக்கமும் விதியின் விளையாட்டும், தொடர்கிறது. நாம் அறிவை (ஸ்ரீ பகவானின்) பின்பற்றி போனால், இந்த அவலநிலை ஏற்படாதே. என உணர்ந்து, சர்வார்ப்பணத்தில்! உன் மனதை களைத்து விட்டாயானால், மனம் ஏது? வினை ஏது? விதி ஏது? இதனால் விதியின் சாமர்த்தியம் முடியும்.



நாம் அதுவாக இருக்கிறோம்
என்பது விசிஷ்டாத்வைதம்
நாம் இ ரு க் கி றோ ம்
என்பது அத்வைதம் ௨௧

இ ரு க் கி றோ ம்
என்பது ஸ்...வ...ய...

௨௦ அநு...பூ...தி! என ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிகிறோம்.

# பேரறிவின் மௌனம்:

அறிவு பேரறிவாகும். ஆரம்ப நிலை, மௌனம் என்றும், பேரறிவினில், அனுபவம் முதிர்ச்சியான நிலையை,

**மஹாமௌனம்!** என்றும் ஸ்ரீமஹான்கள் சொல்ல கேள்வி.


நாம, ரூபம், குணம், குறி, கால, தேச வர்த்தமானம், மனம், வாக்கு, காயம், ஆகிய இப்பத்தும், மௌனமாகும் இடம் பேரறிவின் முதிர்ச்சியாகும். ஆனால் இங்கு ஓர் உணர்வு எப்படி இருக்கும் என்றால்?

ஆ ர ம் ப ம்.
**நாம்...... அதுவாக....** இருக்கிறோம்.

ம த் தி யி ல்.
**நாம்.... இருக்கிறோம்.**

மு டி ந் து மு டி வி ல்
**இருக்கிறோம்.** இங்குநாமும்! அதுவும்!
இ ல் லை.

நாம இ ரு க் கி றோ ம் என்ற விளக்கமே,
உ ங் க ளு க் கா க வே.
அ ரு து பமா உ க ண் ண டு ல் தி



அனைத்து நாம ரூபமும் 22
மண்ணே
எழுவதும்! எழுந்து
ஆடுவதும்! ஆடி ஆடி
வீழ்வதும்! வீழ்ந்து
தூசி! ஆவதும்
தூசி அணு ஆவதும்! அணுவே பரமாத்மா!
21 பரம்பொருள் என ஆவதும், மண்ணே!

# மண்ணின் மகிமை:-

மனித இனம் உட்பட, நடப்பன! பறப்பன! நீந்துவன ஊர்வன! தாவர வர்க்கங்கள்! மற்றும் அனைத்து உயிரினங்களின் தாலங்களும்; கோடானு கோடி, கோள்கள்! சூரிய சந்திராதிகள்! ஆகிய அனைத்து **ஜட** சொரூபங்களும் **மண்ணே!**

உவமான ரூபமாகிய! மண்ணேபரம்! பரமே மண்!!

**பொறுமையின்!** இலக்கணமே மண்தான்.

**நாமரூபங்கள்!** எழுவதும் மண்ணே.

" " வீழ்ந்து லயமாவதும் மண்ணே.

உலகியலில் பேசப்படும், நல்ல காரியமும்! தீய காரியமும்! ! சமமாக ஏற்பதும் மண்ணே.

" " **ஆக்கமும்! ஊக்கமும்! ! அழிவும்! !**

தோற்றம்! இருப்பு! மாற்றம்! மறைவு! **மண்ணே!**

மண்ணுக்கு அன்னியம் எவரும் எதுவும் இல்லை.



ஜலத்தில் தோஷ குணங்கள் (23) இல்லை என சொல்லும் போது ஜலத்தில் உப்பு இருக்கிறதே என கேட்கலாம்? அது அதன் இயற்கையாகவே ஸ்வயமாக! இயல்பாகவே!

(22) இருக்கும் ஒன்றும். ஆகவே ஜலம் மட்டும் நாம ரூப குணம் இல்லாமலும் தோற்றம் (இருப்பு) மட்டும் உடையதாகும்.

# ஜலத்தின் பெருமை :-

ஜலம் என்பது, தனிமையில் தோற்றம் இருப்பு! மட்டும் உடையதாகும். அது எந்த நாமரூபமும்! தோஷ குணங்களும் பெறவில்லை என்பதே ஸத்தியம். ஆனால் ஜலம் உயிர்நாடியாகு! உள்ளது என்பதே உண்மை. ஒருவன் பயிற்சியினால் ஒருவாரம் வரை உணவு அருந்தாமல் இருக்கலாம். ஆனால், ஒருநாள் முழுவதும், ஜலம் அருந்தாமல், இருக்க முடியாது. ஜலம் இல்லாமல், உயிரினங்களோ, தாவரவர்க்கங்களோ, இருக்க முடியாது. ஓர் முக்கிய உண்மை என்னவென்றால்? இந்த ஜலம் மண்ணோடு! இணைந்த பின்னர்தான் நாமரூப! பாத்திர பாண்டங்களும், உலக தோற்றங்களும் உருவாகும். ஜலம் & மண்! இவைகள், முறையாக, புண்ணியம் & பாவம்! என பெரியோர்கள் சொல்வர்.




அகண்டப் பேரொளியை!
நிலவைப் போல்
கு ளு மை!
(24)
என்றீர்களே! அவை
அக்கினி தகிக்கிறதே
எனக் கேள்வி எழுவாம்.
மூலவரைக் காணவோ
விளக்கவோ! சொல்லவோ!
முடியாது என்பது சத்தியம். உச்சவரை
தொடுவதற்கு அனுமதிக்கேல் அவர் உச்ச
வராக இருக்க முடியாது. ஆகவே அவர் இப்படித்தான்
ஆக்கிக் கொண்டார்.

23

# அக்கினியின் தகிப்பு :—


அக்கினி தோற்றம் நிலையில் உள்ளது. அதைக் காணலாம்! தொடமுடியாது! ஓர் பொருளைப் பற்றி, அதை எரித்து சாம்பலாக்கி, அப்பொருள் தன்னை **ஐக்கியம்** பருக்கிக் கொள்ளும். அதன் காரியம் முடிந்த உடன், அதன் **காரணம்**, (அக்கினியின்) ஆகிய, அகண்டப் பேரொளியில்! கலந்து விடும்.

இது பிரம்ம ரகசியமாகும். மூலவர் அகண்டப் பேரொளி என்றும் உச்சவர் அக்கினி என்றும் அனுபவ பரிமாணங்கள் சொல்வர். அதிஷ்டானம் = ஆதாரம் மண்ணையும் (பரத்தாரையும்) ஐவத்தாரையும் (மாயாவாரையும்) ஆன நாம ரூப ஜகத் ஜீவாதி! அனைத்தையும் சாம்பலாக்கி பரமாணு! ஆத்மா! பரமாத்மா! பரப்பிரம்மம்! என ஆக்கிவிடும் என்பதை அக்கினியின் தகிப்பு உணர்த்துகிறது.




# 24. வாயுவின் அசைவு :-

இவ்வாயு வெளியில், சஞ்சாரம் செய்யும் நிலையில், காற்று என்றும், அதுவே உடலில் போக்குவரவு செய்யும் போது, பிராணன் என்றும், யோகப் பயிற்சியின் நிலையில், வாசுதேவன் என்றும், சமீரன் என்றும், பரவாசுதேவன் என்றும், நிலை கண்டு, பல நாமங்களை பெறுவதாகும். நம் உடலை அசைக்கக் கூடியதும், சஞ்சாரம் செய்வதும், இப்பிராண வாயுவே, ஆதாரமாக இருக்கிறது. உடலினுள் இவ்வாயு இயங்கும் போது :- பிராணன், அபானன், உதானன், சமானன், வியானன், என்று **பஞ்சபிராணன்!** என ஞானிகளால் பேசப்படுகிறது. ஒரு தாவகத்திலிருந்து மற்றோர் தாவகத்திற்கு நம் ஆன்மா என்ற ஜீவன், புகும் போதும், பித்ரு லோகம் என்ற ஓர் இடத்திற்கு செல்லும் போதும், இப்பிராணவாயு ஓர் **வாகனமாக,** பயன்படுகிறதென்று, ஸ்ரீ ஞானிகள் சொல்வர். வாயு என்ற காற்றே, அனைத்திற்கும், ஆதாரமாக இருக்கிறது.



வெட்ட வெளி தன்னை
மெய் என்று
இருப்போர்க்கு (26)
பட்டயம்

நாமம்! ரூபி! நாமரூப
அசைவு ஏதுக்கடி??
என்றார் எம் முதம்மை
ஸித்தர். அதே போல்
வெட்டவெளியின் இருப்பு அகண்ட பேரொளி! ஆகும்
ஆகாயத்தின் இருப்பு யோக மாயா ஆகும்.
நீர் ஞானியின் உணர்வு இவ்விரண்டையும் உணர்வதே.

(25)

# ஆகாயத்தின் இருப்பு:—

ஆகாயம்! பஞ்சபூதங்களில் ஒன்று ஆகும். மற்றும்
பஞ்சபூத பிரிவான, மண்! ஜலம்! அக்கினி! வாயு!
ஆகிய இந்த நான்கிலும், இருப்பும் & இயக்கமும்
வரி & வாக்கு வடிவில் விவரிக்கவாம். ஆனால்
இந்த ஆகாயத்திற்கு மட்டும் இருப்பும் இயக்கமும்

**மறை!** நிலையில்! தோற்ற விலில். தோற்ற இயலாது.

**அறிவு!** நிலையில் உணரலாம் உணர்த்தலாம்.

அந்த ஆகாயம்! வெட்டவெளியின் நிலையில் அதன் இருப்பு

**அகண்ட பேரொளி!** ஆகும்.

அந்த ஆகாயம்! ஸ்கை ப்ளு! என்று தோன்றும் நிலையில்,

**யோகமாயா!** ஆகும் இது மேலோட்டமாக நின்றால்
மட்டும் உணரமுடியும். நாமரூப ஜீவஜட
சொரூபங்கள் அனைத்தும் இந்த ஆகாயம் இன்றி
இல்லவே இல்லை இது ஸித்தியம். இதுவே சர்ப்ப காலம் யோனி




27

மன எண்ணம் இல்லாமல், வினை இல்லை. வினை இல்லாமல் தாபம் இல்லை. தாபம் இல்லாமல் புண்ணியம் & பாபம் இல்லை. புண்ணியபாபம் இல்லாமல் ஜன்மா இல்லை. ஜனனமரணம் இல்லாமல் நாமரூப ஜகம் இல்லை.

26


# மனதின் எண்ணமும் வினையின்

பின்னும் :— மனதின் எண்ணம், நாமரூபத்தை பற்றியே எழும். நாமரூபம் இல்லையானால் எண்ண வர வழியே இல்லை. அவ்வெண்ணம், நாமரூப பேதமாக, தோன்றும். அப் பேத எண்ணத்தால், விருப்பு & வெறுப்பாய், தோன்றும். அவ்விருப்பு வெறுப்பால், குற்றம் குறை, எக்கடின முயற்சி இல்லாமல், எளிதாய், இயல்பாய், தோன்றிவிடும். இக் குற்றம் குறையால், புண்ணியம் & பாபம், எக்கடின முயற்சி இல்லாமல், எளிதாய், இயல்பாய், தோன்றிவிடும். மேலே கூறிய மூன்றுமே (பேதம், விருப்பு வெறுப்பு, குற்றம் குறை) புண்ணியபாப வினைகளாகி, பின்னிட்டு, மனதின் துணை கொண்டு { ஓர் சரீரத்தை உருவாக்கும். அச்சரீரத்தை வைத்து விளையாடும். அவ்விளையாட்டை ஜகம் என சொல்வர்.



மனம் இல்லாமல் 28
வினை இல்லை.
வினை இல்லாமல், அதை
நடத்தும் விதி இல்லை.
வினையும்/ (நாமரூபமும்)
விதியும் (சூக்காவமும்)
இல்லாமல் ஜக ஜீவ
27
உறவு சுற்றம் இவர்களின் பாசப்பிணை இல்லை.

வினையின் பின்னலும்! விதியின் விளையாட்டும்
முன் கூறிய நிலையில், மனஎண்ண வினையால்!
தோன்றிய, சரீரத்தை வைத்து, வி ளை யா ட
விளையாட்டு கூடமாகிய, இவ்வுலகை உண்டுபண்ணியது
விதி என்னும் காலம் (காலதேவன்) ஆகும்
இவ்விதியின் விளையாட்டை, எவரும் காண முடியாது.
காணஇயலாது. அது சூட்சுமமும் (மாயாவும்)
சூஸ்திரமும் (வினைக்கயிறும்) சாஸ்திரமும்,
(ஓர் விதிமுறை கட்டுப்பாடு) எனஒன்றில் பின்னிக்கப்
பட்ட ஓர் பின்னல்! ஆகும்.
இம்மன வினையின்! பின்னலால் விதி! எக்கடின
முயற்சி இல்லாமலும், எளிதாகவும்! இயல்பாகவும்!
ஜக ஜீவர்களை வைத்து விளையாடுகிறது.



மன எண்ணம் சொல் செயல்
இவைகளால் (29)
வினை பெருகிறது
என உரைத்த மனமாறு
முன் செடியை தின்று தின்று
அயர்ந்தைப்படும் ஒட்டக
த்தைப் போல் கரும் உபாய
உருகிறதும் அவ்வுபாயமாய

(28) நன்றவே தான் கெட்டால் அன்றுவரி என் செம்மல்
என்றறியில் கடவுளை பழித்து வாசிக்கச் செய்ய
அறியாமல் மனமிருக்கிறது.

# மனதின் கேள்வியும்! விதியின் பதிலும்:-

இம்மனதின் அறியாமை எப்படி இருக்கிறது என்றால்?

தன்னுடைய குணம் (வேகம்! விருப்பு வெறுப்பு!
குற்றம் குறை) தனக்கே தெரியாமல், வினையால்

இஷ்டம் கவலை துக்கம் துயரம் வறுமை பிணி அவஸ்தை!
இவைகளால் தாக்கப்படும் போது; எங்கள்
விதி இப்படியா இருக்க வேண்டும்? அந்த கடவுளுக்கும்
கண் அவிந்து போச்சே! கருணையே இல்லாத கல்
நெஞ்சு கடவுளுக்கென, இன்ன முழுமையாக திட்டி
திட்டி மனதின் பாரம்! அதிகமாகி விடுகிறது.
இதற்கு விதி என்ற காவல் (தேவ தேவன்) என்ன
சொல்கிறதென்றால், எண்ணம்! சொல்! செயலால்!
நீ (மனம்) தேடியதை, நீதானே அனுபவிக்கவேண்டும்?
உன் வினைக்கு பிறர் பொறுப்பில்லை, பிறர் வினைக்கு நீ பொறுப்பில்லை
உன் எண்ணம் விதி; உன்னை சாராமல் இருக்க அவனை!
நம்பி சமர்த்தி செய்! சிரமம் குறையும் என்றது விதி.



விதியை மதியால் வெல்லலாம்

விதியின் வழியே மதி செல்லும். (30) என்பதை சற்று மாற்றி ஸ்ரீபகவானின் கருணைக்கு ஏங்கும் மனிதர்க்கு சூத்திரம் இருக்கிறது தவம்

(29) காலசக்கரம் (மாயையால்) மாற்றி அமைத்து அமைதியாய் உன்னை பார்க்கிறது.

# விதியின் விளையாட்டும் ஸ்ரீபகவானின் கருணையும்

கருணையும்:- மேலே சொன்ன அனுபவமான வாசகத்தை, சத்சங்கம்/ சாது தரிசனம்/ சாது சேவை/ மூலமாக பெற்றமனமானது, ஓர் குருமூலமாக, ஸ்ரீபகவானை சரணடைந்தது. ஸ்ரீபகவானின் நாம ஸ்மரணையால், எண்ணங்கள் சாந்தி அமைதியானது. அதனால் வினையின் வலு குறைந்தது. அதனால் விதி என்ன செய்கிறது என்றால்? கடும் தோஷ

(வினைகள் நடந்து முடிந்திருந்தால் ஸ்ரீபகவான் கருணையால் பின்வரும் பலன் இல்லாமல் செய்து விட்டது.

,, (நடக்க வேண்டியது இருந்தால், ஸ்ரீபகவான் கருணையால் முன்பின் மாற்றி வலு குறைக்கச் செய்து விட்டது.

மேலும் அவ்விதி/ அம்மனதை/ ஸ்ரீபகவானின் கருணைக்கு ஏற்றபடியில் கற்றம் சூழ பக்குவப்படுத்தி, வழி வகுத்துக் கொடுத்து விடுகிறது. இது விதியின் விளையாட்டு ஆகும்.



விதியை மதியால் (ஸ்ரீபகவானால்) வென்ற மனம் அறிவாகி விடுகிறது. ஆகவே ஸ்ரீபகவானே ஓர் ஸத்குருவை காட்டவோ ஓர் ஸத்குருவாய் வரவோ, இவ பரகருணை நியதியால் நடைபெறுகிறது. ஆகவே இங்கு

31

அறிவே பேரறிவாக மாறி விடுகிறது இவ்விங்கு ஸத்குருவின் கிருபை பெறும் நியமமே.

30


## ஸ்ரீபகவானின் கருணையும்! பேரறிவின் வருகையும் :—

விதி என்பது ஸ்ரீபகவானின் ஓர் அங்கம் ஆகிறது என உணர்.

**விதி** :— பாரபட்ச தோஷம் இல்லாமல் **நீதி**யை நிலைநாட்டும் வகையில், கண்டிப்பு கண்டிப்பு உடையது.

**ஸ்ரீபகவான்** :— கண்டிப்பு கண்டிப்பு இல்லாமல் கருணையின் நியதியில், **குரு** களிக்கும் அறிவு ஆகும் குருவின் வழிகாட்டுதலால், சர்வார்ப்பணம்!

என்பதில் முழுமையாக **மனம்** ஈடுபடுகிறது. அதனால் சர்வார்ப்பணம் / ஆர்த்தி ஆகும் நிலையால், அம்மனம் ஸ்ரீபகவான் கருணையை, முழுமையாக பெறுகிறது. அதனால் **விதி**யின் பிடியிலிருந்தும் கொஞ்சம் கொஞ்சமாக, விலக்கப்படுகிறது. இந்நிலைப் வழிகாட்டும் நிலையிலிருந்த **குரு**! தாமே ஓர் **ஸத்குரு**! கைகாட்டி ஆகிறார். இங்கு அறிவு (ஸ்ரீபகவான்) பேரறிவாக (ஸத்குருவாக) மாறுகிறது என உணர்க. இங்கு மனம் / ஸ்ரீபகவான் காட்சியால் மயங்கி விடாது உண்மைக்கு ஏங்குகிறது.



இங்கு ஸத்சிஷ்யன் (32)
ஓர் பருவமங்கை
ஆகிறன் என உணர்க.
அவனுடைய சிரத்தையே
ருது ஆகும்.
ஸத்குருவின் உபதேசமே
பிந்து ஆகும்.
அவனுடைய கர்ப்பம் ஞானம் ஆகும்.
ப்ரம்மானந்தமாகிய ஜீவன்முக்தியே/ அவன்
சிசு ஆகும்.

(31)

பேரறிவின் ஸத்குருவின் மகவும்!
ஜீவன்முக்தியும்: — இங்கு ஸத்குருவின்
பார்வைபட்ட சிஷ்யன்! ஸத்சிஷ்யன் என ஆகிறன்.

ஸத்குருவிடம் ஆத்மஞானம்பட்டு ஸ்வயஞானானுபவம்
எப்படி அனுபவம் ஆகிறது என்றால்?

(A) கேட்பதிலும்! படிப்பதிலும்! அதி சிரத்தை யாக இருக்கனும்

(B) அதி சி ர த் தை யி ல் நம்பிக்கை

(C) அந்த பூரண ந ம் பி க் கை யி ல் வைராக்கியமும்!
உ டை ய வ ர இ!

(D) அ னு ப வ ஞானம்! பெற்று!

ஜீவன்முக்தி பெ று கி ற ன்.



ஜக தோற்றத்தில்
**நாமரூபம்!** (33)
நாமமே உண்டாக விஸ்வம்
இம்மனம் படைத்த மனிதனின்
தேவை & ஆசை! ஆசை & தேவை!
**அநுபோக** கற்பனையால்
(32) நாமரூப ஜக ஜீவ தோற்றத்தின் உண்டாயினும்
நான்எனது என்ற ஜீவகர்த்தத்துவத்தால் ஞானமமனம்
உண்டானது.

**நாமரூபம்!** தோன்றிய விதம்:-

பஞ்சபூதங்களை! உண்டாக்கியது **மாயா!** ஆகும்
அப்பஞ்சபூதங்களை, (குறிப்பாக கல் மண் & ஜலம்
தாவரவர்க்கங்கள்) வைத்து ஒன்றுடன் ஒன்றை,
இணைத்தும்! பிணைத்தும்! (இயற்கையின் தோற்
றத்தை, செயற்கையின் தோற்றமாக்கி) அத்தோற்
றங்களுக்கு, நாம் அநுபவிக்கும் நாமிக்கு, ஒவ்
வொன்றுக்கும் ஓர் **நாமாவை!** வைத்து
இந்த நாமரூபத்திற்கு உரிய கர்த்தா!
**நானே!** என்று **ஜீவ!** கர்த்தத்துவத்தை!
உண்டாக்கியது மனமே.
இதில் இன்ப துன்ப நுகர்ச்சியின் நிலையால், இந்த
மனமே! தேவை & ஆசை! ஆசை & தேவை! என
**தாப!** பருக்களை! உண்டாக்கியதும் மனமே.
**நான்! எனது!** என்ற அஹங்கார மமகாரங்களை
தனக்குத்தானே, பற்றாக் கொண்டு நாமரூபம்
என்ற, ஆவரண மயக்கத்தில், வீழ்ந்ததும் இந்த மனமே.




33

நாம ரூபம் விளையாட்டில்லை. நாம ரூபம் நாமாக உண்டாகவும் இல்லை. நாமரூபத்தை உண்டாக்கியதும்! ஆசை தேவை என்கின்ற பின்னங்களும் நான்! எனது என்கார சாரமாக விளையாடுவதும், அவ் விளையாட்டால், வினை பெருகுவதும் அவ்வினையால், ஜனனமரணம் உண்டாவதும் மனமே காரணமாமே

## நாமரூபம் விளையாடும் விதம்:-

வெகுமனே, நாம ரூப பொருள்களை, வைத்து விளையாடினால், காரசாரம் இல்லாத்தன்மையால் சுவாரஸ்யம்! இராது என கருதி, மனித ஜீவ! தோற்றங்களை, அண்ணன் தம்பி! அக்கா தங்கை! மாமன் மாமி! கணவன், மனைவி, குழந்தைகள்! உறவு, சுற்றம், நட்பு! என இவைகளை கற்பனையால், உறவு! கொண்டாடும் பாவனையை, உண்மையாக நம்பி. அதனால் போக்குவரவு! கொடுக்கல் வாங்கல் என, சொந்த பந்த பாசத்தை, உருவாக்கி நீ வந்தால் தான் நான் வருவேன். நீ கொடுத்தால்தான் நான் கொடுப்பேன்! என, தடைத் தேவைகளை எடுத்து, வழி பிரியாருக்கு உடைத்த, கதைபோல், எல்லாமே ஸ்ரீ பகவான் பொருளாக இருக்க, அவனை மறந்து அவன் பொருளை, என் பொருள் என்றும், அவன் செயலை என் செயலென்றும், உடைமை உரிமையால், கர்மாவை பெருக்குவதே, மனதின் (நாமரூப!) விளையாட்டாமே.



அனைத்து நாமரூப
ஜீவ ஜக தோற்ற
ங்களும்; உன்
சர்வார்ப்பணத்தால்
ஜட ரூப பதுமைகளாகும்.
பின் ஸ்ரீ லக்ஷ்மி அருளும்!

(35)

(34) பிரம்மார்ப்பணத்தால்மட்டும் மணமாகிய!
பராசக்தி சாரூபமாகும்! நீ இவணுக்குருவாய்

**நாமரூபம்** | நாசமாகும் விதம் :-

**நாமரூபம்** { ஆசை & தேவையாவும் உன்
நான்! என்னுடை! எனதாகும் பாவனைது


மேலே கூறிய, ஐந்தாலும், உண்டான நாமரூபமானது,
„ „ ஐந்தையும் **நாசம்** | செய்தால் நாசமாகும்.

இதன் அதி முறை.

(1) **மனம்** உன்னிடம் வீரியமாகும் வரையிலும்;
**சர்வார்ப்பணம்** | வெகு, வெகு, வெகு, வெகு உறுதியாக இருக்க வேண்டும்.

உன் சர்வார்ப்பணத்தால் தான் உன் மனம்! அமைதி, சாந்தி, ஆனந்தம் பெறமுடியும். அகவே அங்கு உன் ம ன மே! அருவாகி, ஸ்ரீபகவான் நிலையை பெற்றுவிடும்.

(2) **அறிவு** | உன்னிடம் நிலைத்து நிற்கும்போது,
**பிரம்மார்ப்பணம்** | அதி, அதி, அதி, அதி, எளிதாகவும் சுலபமாகவும் நடைபெறும் நிச்சயம், நாமரூபம் அனைத்தும் உன் ஸ்வய அனுபவத்தில் பதுமைகளாகமாறும். பின் எ வீ. வாம்
**மணி** | எனஆகிவிடும். நாமரூபம் நாசமாகும் வழி இதுவே.



36

ஆத்மா பந்தப் பட்டிருக்கிறது எனவும்! உயிர் பந்தப்பட்டிருக்கிறது எனவும் உடல் பந்தப்பட்டிருக்கிறது எனவும் இன்றி பலவாறாக சொல்வது எல்லாம், அறியாமையே

மனோநாசமே ஜீவன் முக்தியாகும்.

35

மனமே! நான்! எனதான ஜீவகர்த்தத்துவத்தால் பந்தப்பட்டிருக்கிறது.

# நாமரூப ஜீவபந்தம் ஏது?

ஜீவன் என்பது, அன்றும் இன்றும் என்றென்றும் இல்லை.

ஆத்மாவே! ,, ,, ,, உள்ளது.

மாயாவின் மகனான, மனம்! தான் விளையாடும் நிமித்தமாக, நான்! எனது! என்ற ஜீவ கர்த்தத்துவ வேஷத்தையால், ஆத்மாவை மூடிக்கொண்டு, காமசாரமாக விளையாடிக் கொண்டிருக்கிறது. அவ்விளையாட்டை, விளையாட்டாக பாவனை செய்ய முடியாத, அறியாமையின் ஜீவர்கள் மட்டும், நாம் பந்தப்பட்டிருப்பதாக விகற்பு இன்றல்.

இது மனோ பந்தமே! அன்றி, ஜீவ! பந்தம் இல்லவே இல்லை என்பதே சத்தியம். இம்மனம் எத்திரையால் தன்னை மூடியதோ, அத்திரையை, அறிவால் அகற்றி விட்டால், மனோபந்த நாசமாகி, மனம் ஜீவன் முக்தி பெற்றுவிடும். அதுவே பந்த நிவர்த்தியாகும்.



ஓர் நாமத்தை (37) வைத்தே ரூபம் கற்பிக்கப்படுகிறது.

நாமம் :- சூட்சுமம்.

ரூபம் :- தூலம்.

இவ்விரண்டும் இணைவதே

(36) நாமரூப ஜகஜீவ தோற்றம் என உணர்ந்தால் போதும்.

சிவசமயம் ஓர் தோற்றத்தை உண்டு பண்ணி நாமம் கொடுப்பதும் உண்டு

**நாமம்** என்றால் என்ன? **ரூபம்** என்றால் என்ன?

நாமம் என்றால் வாக்கின் **ஒலி** / வடிவமும் (ஸம்ஸ்காரமும்) உடைய **சூட்சுமம்** / ஆகும்

இந்த நாமம் அப்படி ஸம்ஸ்காரமாக ஒலிப்பதை, **தூல** வடிவில் காண்பிப்பது **வரி** (எழுத்து) வடிவமும் ஆகும் என்று ஞானிகள் சொல்வர்.

ரூபம் என்றால் எந்த ஒலிவடிவ, ஸம்ஸ்காரத்தை கொண்டு, ஒரு பொருளை துலங்கவும் / விளங்கவும் / செய்கிறோமோ, அப்பொருள் **நாமரூபம்** / (கண்ணால் காணக்கூடிய வடிவம்) பெறுகிறது. ஆகவே ஓர் நாமமானது / சூட்டியதால், ஓர் ரூபத்தை காண்கிறோம். ஆகவே நாமம் இல்லையானால் ரூபம் துலங்காது / விளங்காது. ஓர் தோற்றம் (பொருள்) இல்லையானால், நாமமும் பொருளுமில்லை / புகழுமில்லை / இருப்புமில்லை /



38

மனிதகுலம் பிறந்த ஒவ்வொருவனும் ஸ்ரீபகவானின் காலையும் பாதத்தை நாடும் என உணரவும் தான் வந்தான். ஆனால் இது கலியுகமாக இருப்பதால், இறையை தேடிவிட்டு. இறைவனின் காலை மறந்துவிடுகிறான். ஆகவே இறைவனின் காலடியை பிடிப்பதே சத்தியம்.

37

இறைவனை தேடு. இறையை தேடாதே.

ஒவ்வொரு மனிதனும்! ஸ்ரீபகவானை நாடி ஓடி தேடி அடைந்து. அவனோடு உறையாடி! உறவாடி! இரண்டற கலந்து! அவன் கிருபையால் வரும் ஓர் ஸத்குரு!

ஓர் ஸத்குருவை காட்டுவான்! அல்லது ஸத்குருவாய் வருவான்!

வழிகாட்டியாய்! அழைத்துச் சென்று. கைகாட்டியாய்! தாம் நின்ற நிலையில்

ஓடம் கரை ஏறுது. ஏணி பரம் ஏறுது. உன்னை பரத்தோடு கலந்து விடுவானே. அப்படிப்பட்ட கருணை மூர்த்தியை! மறந்து இன்பத்தின்ப இறையை! ஏன் தேடுகிறாய்? அவன் திருவடியைப் பற்றிக் கொண்டால் போதுமே. அவனே இறையும் தருவான். இறைவனும் ஆவானே. தவறாமல் விடு.



உன் பணி! 39

அவனை சேவிப்பது

அவன் கடமை!

உன்னை காப்பதும்!

உன் நல்ல கண்டு பரமுக்தியா?

பகமுக்தியா? கருணையோடு,

என உணர்ந்து உனக்கு ஏன் மறந்தாய்??

அருளும் இறைவனே

38

அவனை பணிவது உன் கடமை. உன்னை! காப்பது அவன் கடமை

(ஸ்ரீபகவான்) கடன் என்ற கடமை! (ரசுவையது)

தன் ஸ்ரீபகவான் அடியேனையும் தாங்குகவே

எம் மனதை உடைய மனதனின்! கடமை, உன்னை பணிவதே.

இதன் காரணம்!

இவ்வுலகமும், அதன் அனைத்து பொருள்களும்!

அனைத்து ஜீவ! இயக்கமும்!

ஸ்ரீபகவானுடைய, மாயானை! உடையதால்

நீ அவனை மட்டும் பணிந்தால் போதும்.

உன் வினையின் காரியம் அனைத்தும் ஒதுங்காத நடைபெறும்,

அதை அவனிடம் ஒப்படைக்காமல் நீ அவைகளை


என! காரியம் எனமாற்க்காயாளல், அப்புகற்றல்

காரியம் அனைத்தும், சிதறிப் போகும். காரணம் உன்

மனதின்! மோன வேஷம் அப்படி பண்ணிவிடும்.

அவனிடம் பொறுப்பை கொடுத்து விட்டு பதுமையாக!

சும்மா சுகமாக இருப்பாயாக.




40

நிம்மதியாக இருக்கவேண்டும் என்றால், அறிவாக இருக்கவேண்டும் என்று பொருள்படும். அறிவாக இருப்பது பொறுமையாக இருப்பதும், எதையும் நல்லதே என ஏற்றலும், குற்றம் குறைகள் மறப்பதும் மன்னிப்பதும் சகித்துக்கொள்ளலும் ஸ்ரீபகவானை நம்பும் நியாயமே. அதனால் மட்டுமே நிம்மதி! சாந்தி! அமைதி! ஆனந்தம்! பெருமையும்.

39

# விதியை நிம்மதியால்! வெல்வோம்

விதியை பிராரப்தம் என்றும், தலை எழுத்து என்றும், சொல்வார்கள். அந்த தலை எழுத்தை, சொல்லும் போது, அன்று எழுதியவன், (பிரம்மதேவன்) அழித்து எழுதப் போவதில்லை! என்றும், சொல்வதுண்டு. இந்த விதியை மாற்றவோ! மறுக்கவோ! விலக்கவோ! முடியாது என்பதே முடிந்த முடிவாகும். ஆனால் இந்த விதியை மதியால் வெல்லலாம் என்றால், அந்த மதியானது அதாவது **நிம்மதியாக**! இருக்க வேண்டும். அது ஸ்ரீபகவானுடைய மதியாக (அறிவாக) இருக்க வேண்டும் என்று பொருள்படும். அப்படியானால், விதியை (மனதால் தேடியதை) அறிவால் (ஸ்ரீபகவானால்) வெல்லமுடியும். அதாவது அவனை சரணடைந்தால் அவ்விதியை, வலிமை இழக்கச் செய்யலாம். அன்று முன்பின் மாற்றி அமைக்கலாம். பாதிக்காமல் அனுபவிக்கலாம் என்பதே இதன் பொருளாகும்.



நம் வாக்கே! 41

அக்கினியும் அமிர்தமும்! வரமும்! சாபமும்! வினையின் வித்தும்

40

ஆகும் என உணர்க. ஆகவே பேசாவிடில் சர்வ ஜாக்ரதையாக இருப்போமாக. அதுவே வாய்க்கால் ஆகும் என உணர்.

வல்லான் வகுத்தது **வாய்!** க்கால் ஆகும்.

இவ்வாசகமும்! சென்ற விதியை! ஒட்டியே அமையும். ஆனால் இதில் ஓர் சிறிய மாற்றம் உண்டு என அறிக.

வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்பதும் இதுவும் **தெய்வமே!** ஆகும். ஆனால் இங்கு பிரம்ம தேவன்! அவ்விதியை எழுதவில்லை. நமக்கு **நாமே!** எழுதிக் கொள்கிறோம் என அறிக.

எப்படி என்றால் **நம் வாக்கே! நம்!** தலைவிதியை! எழுதி விடுகிறது என அறிக.

சாபமும்! வரமும்! நம் வாக்கே! காரணமாகும். இது ஆகாமிய நிலையில் சேர்வதாகும். நம் வாக்கில் கவனமாக இருத்தல்; இவ்விதியிலிருந்து தப்பலாம் என அறிக. ஆகவே வாய்க்கால் என்பது நம் வாக்கை வைத்தே! இறைவன்! முடிவு செய்கிறான் என அறிக.



ஆத்திரம் என்ற வேகம் உண்டாகும் போது அறிவு மறைபடுகிறது எனை உணர். அறிவு மறைந்தால் அனர்த்தம் வாய்ந்து சர்வநாசமாகும். நாமாவே அன்று உன் நிலை ஆகும்.

42

41

# இறை & குரு

ஆத்திரம் வரும்போது நின்று உணர் போடு திரு


# ஆத்திரம் அறிவு நாசம்!

ஆத்திரம் எதனால் வரும் என்றால் நாம் நாடும் & தேடும் பொருள் கிடைக்காத போது, ஆத்திரம் வரும். அல்லது மானவிமானம்! போகும் சூழ்நிலையிலும், ஆத்திரம் வரும். அதாவது விரும்பியது கிடைக்காத நிலையிலும்; வேண்டாதது நம்மை தொந்தரவு செய்யும் நிலையிலும்; ஆத்திரம் வரும். இதை சற்று உற்றுணர்ந்தால்; இது நம் கவனக்குறைவு! என உணரமுடியும். இதை உணர்க. எம்பட்டினத்தடிகள்! சொல்வது:- உள்ளது உன்னை விட்டு போகாது. அல்லாதது உன்னிடம் வராது.

# பள்ளத்தில் வெள்ளம்பாயும் (நிரம்பும்)

என்கிறார். அதாவது உனக்குரியது உன்னை வந்து சேரும். இருந்தாலும் அதை தடுக்க முடியாது. எத்தடைகள் நீ எம் முயற்சி செய்தாலும், உனக்கல்லாதது[?] தானே விலகிவிடும். ஆனால் உன் முயற்சி:- உள்ளத்தை பள்ளமாக்கித் தொண்டு[?]

இறை **கருணை!** நாடும் நிறையும் அன்று ஆத்திரம் அவமானம் சர்வநாசமாகும்.



ஸ்ரீ பகவானை வேண்டி (47)
அழுதால் உனக்கு
வேண்டியது கிடைக்கும்
வேண்டாதது அகலும்.
அதனால் ஆத்திரம் ஆவே
சம்! கோபதாபங்கள்
சர்வநாசம் ஆகும்.
அவன் கருணை கிடைக்கும் போது,
உன்னை அழுத்தாது. அதை
அவன் மாயா கவனித்துக்
கொள்ளும்.

(42) குடும்ப பாரம்

# கோபம் பாபம் அறியாது:—

முன் கூறிய, நிலையில் ஆத்திரம்! அவசரம்! வேகம்! என வந்தால், அப்போது வருவது கோபமல்ல.

**கோபாவேசம்** (கோபத்தின் ஆவேசம்)

இக்கோபாவேசம் உண்டாகும் போது காட்டாக்கினி ஆகும் போன்று, நீ விரும்பியது, நீ விரும்பாதது, அனைத்தையும் சாம்பலாக்கி/சர்வநாசம் செய்து விடும். நீ எட்டிப் பார்க்கும், எந்த பொருளும் இராது. எல்லாம் கரிக் கட்டையாகி விடும். பின் வருந்தி எப்பலனும் இல்லை. அக்கோபாவேசம்! வரும் போது **எப்பாபம்** நடைபெறுகிறது என்றே, நடைபெற்றதென்றே. தெரியாமல் அறிவு கண்ணை மறைத்து விடும். ஆகவே **பின்** வருந்துவதை விட **முன்** வருந்துவோம். ஸ்ரீராமா! நீ வேண்டும்! உன் கருணை வேண்டும்! உன்னையல்லால் வேறெதுவும் வேண்டாம்! என்று வருந்தி உருகி அழுதால்! அக் கோப, பாப, தோஷங்கள் எல்லாம் மறைந்து விடும். சண்டாள கோபத்தை சாகடித்துக் கொல்! என்றார்கள் சண்டாளன் என்பது உருவம் அல்ல. சண்டாளன் என்பது கோபம் ஆகும் என அறிக.




(44)

நிறைவாக என்றும் நிலைத்திருந்து சொல்லும் காரணம் :- தொடர்ந்த பந்த உறவுகளை நிறைவாக ஏற்கிறது. ஆறாவது நாமரூப பொருள்களை ஆகாயத்தோடு தொடர் வினை ஆக்கி மீளமுடியாமல் பின்னிவிட்டு; நாடகமாய் நடப்பது இந்த மாயா மனமே.

(43)

# கொடுத்ததை வாங்குகிறோம். வாங்கியதை கொடுக்கிறோம் :-

இவ்வுலகம் பண்டம் பரிவர்த்தனை என்ற நிலையில், கொடுக்கல் வாங்கலில் **பற்று வரவு!** தீர்க்கும் ஓர் வியாபார ஸ்தலமாகும். இதன் ரகஸ்யம் என்னவென்றால்? இயற்கையின் தோற்றங்களை மட்டும் (மண்! மரம்! ஜீவன்! தாவரம்!) ஒருங்கிணைத்தது **மாயா** ஆகும். மாயாவின் மகனை, **மனம்!** அவ்வஸ்துக்களை, ஒன்றுடன் ஒன்றை, இணைத்தும்! பிணைத்தும்! தேவை ஆசை! ஆசை தேவை! என்ற நிலையில், ஒருபொருளை உருவாக்கி (ரூபம்) அவைகளுக்கு, ஒரு பெயரிட்டு (நாமம்) அழைத்து. **ஜீவ** நிலையில் தான் இருந்து கொண்டு நான் என்று எண்ணி வினைகளை பின்னிவிட்டு, கொடுக்காமலும் வாங்காமலும்! போகாமலும் வராமலும்! இருக்கமுடியாத சூழ்நிலையை உண்டு பண்ணி, மாயாவின் (ஸ்ரீபகவானின்) பொருளை (மொத்த வியாபாரி) சில்லறை வியாபாரியான மனம் தாரசாரமாகவும் பற்று வரவுகளை நிறைவாக செய்கிறது. ஆனால் நாம் குழம்பி போகிறது.



45

எந்த மறையும்
எல்லாம் நீயே
என்ற உணர்விருந்தால்
கொல்வதோ!
தின்பதோ!
பாதுகாப்பதோ!
நீயும்! எதுவும்! விதிமுறை
சமச்சீராக நடைபெறும்.
மாயா நாடகத்தை முடிக்கும்.

44

**வருவாமல்!**
(அறிவு உனக்கு வேறு இல்லை)

**நீ** கொன்றவை உன்னை கொல்லும்! **நீ** தின்றது உன்னை தின்னும். **நீ** பாதுகாத்தது உன்னை பாதுகாக்கும்.

**ஜீவமதே!** நீயால் நிலை உண்மைகளை உணரலாம்.

**அறிவு!** பிரகாசித்தவர்களுக்கு இது தேவை இல்லை.

எம் ஸ்ரீ பட்டினத்தார்! சொல்லும் ஓர் ரகசியமாகும்.

**மண்!** ஆசைப்பட்டோம் ஆகவே எ ம் மை!
(தூவத்தை)

**மண்!** சாப்பிட்டுவிட்டது என்றார். இதை யுத் பாவம் தத்பவதி! என்றும் உணரலாம்.

அதாவது இந்த நாம ரூப ஜகத் ஜீவ தோற்றங்களில்! எதன்மீது அதிக பற்று வைக்கிறாயோ அது உன்னை உண்ணும் (அதுவாகவே நீ ஆவாய்) அப்படியானால் நாமரூப பற்றை விட
என்பதே பொருள்.

**பற்றுவரவு!** என்றநிலையால், இவ்வுலக சூழ்ச்சியானது

**பழி** வாங்கும் என்றும், **பசி** தீர்க்கும் என்றும், **பாது** காக்கும் என்றும், ஓர் உண்மையை, ஆதி ஸ்ரீ மறைகள் உணர்த்தின.

நீ எதை செய்கின்றாயோ! அது முன் கணக்கு முடியும். அல்லது பின் கணக்கு தொடரும். இவ்வுலகில் இதுவே **விதி** ஆகும்.

இங்கு சர்வார்ப்பணமே ஒன்றே! இவ்விரண்டையும் முடிக்கும் நிவாரண மருந்தாகும்.



எதிர்பார்ப்பு 46


இல்லாமல் வாழ்க்கை இல்லை என்று ஆகிவிட்டது. நீ எதிர்பார்க்கும் பொருள் காலகதியில் மாறும் மறையும். அதனால் ஏமாற்றம் அடைகிறாய். மாற்றத்தால் வரும் ஏமாற்றத்தால் மனம் தடுமாறி, நம்பிக்கை இழக்கிறான் மனிதன். இறை திருநம்பிக்கை இருந்தால், இவ்வாறு நடவாது.

# 45 நம்பினோர் கெடுவதில்லை:-

நம்பிக்கை, என்பது இக்கலியில், இயலாத காரியமாகிவிட்டது.

காரணம்:- நாமரூப, பொருள் மோகமே.

உறவு, சுற்ற நட்பின், மமோகம். பட்டம், பதவி, பணம், கௌரவம், அந்தஸ்து, இவற்றின் போட்டி பொறாமை, மேலே கூறிய, இவைகள் இல்லாமல், உலகில் வாழமுடியாதே, என்ற வாழ்க்கையின் மேல் வைக்கும் பற்றின், நம்பிக்கையானது, பற்றற்றானின் தாள் (திருவடியை) பற்ற மறுக்கிறது. இப்பற்றை பற்றினால், அப்பற்று விட்டுநாசமடையும். ஆனால் கலியில், தோன்றுமை பெண்மையானது, எப்படி இருக்கிறது என்றால்:- தீமையை பற்று, நம்பிக்கை வை, என்று நன்மையை பற்றாதே, நம்பிக்கை வேண்டாம் என, அமைந்து விட்டது. கலியின் கோலம்.



47

மண்ணையும் கல்லையும் ஆன ஆலயங்களில் ஸ்ரீபகவானை காண முடியாது. அவன் உன் இதயகுகையினுள் உள்ளான். உன் உருக்க ஏக்க கண்ணீர் பெருக்கத்துடன் உன் உள்ள கோயிலுள் தரிசித்த பின்னரே, அவன் எங்கும்! எதிலும்! உள்ளான் என உணரமுடியும்.

46

# உள்ள! உருக்கமும்! கண்ணீர்! பெருக்கமும்! துடிக்கும்! ஏக்கமும் என்ன செய்யும்?

(A) உள்ள உருக்கம்:- உன் இதயமே உன் இறை & குரு வசிக்கும் ஆலயமாகும். உன் உள்ள உருக்கத்தினால், உன் இதயம்! சுத்தமாகிறது. தீய! தோஷ! வக்ர! குணங்களோ! உன் இதய அசுத்தமாகும். அவை அனைத்தும் நாசமாகும். வேறு எதாலும் உன் இதயம் சுத்தமாகாது.

(B) கண்ணீர் பெருக்கம்:- உன் கண்ணீரே **புனித கங்கை!** ஆகும். வெளியில் காணும் கங்கை! புறத்தை சுத்தமாக்கும். அகத்தை சுத்தமாக்காது. உன் உள்ளத்தில் கங்கையின் தீய! தோஷ! வக்ர! குணங்கள்! மேலும் தோன்றாமல் இருக்க கண்காணிப்பாக காவல் செய்யும். (ஆற்றல் மிக்க சக்தியாகும்.)

(C) துடிக்கும் ஏக்கம்:- இதுவே உன் இறை & குருவை **ஏங்கி அழைக்கும் ஓசை** (ஒலி) ஆகும். இதை இதயநாதம் (ஹக்கிவாக்கி! ஏங்கி ஏங்கி! அழுது) மடிபவர் நாடு என்பர்.

(அழுதால் உன்னைப் பெறலாம். அதுவும் ஆகலாம்) நெறியாத மனிதர்க்கு உரியாது கண்டு கொள்ள.



உன் உடலும் 48
உலகும்
அனைத்து நாமரூபமும்
உன் மனமானது
முதலில் மறந்து
பின் மறைந்து
அனுபவத்தில் இறந்து

47

போகும் வகையில் ஸ்ரீபகவானின் நாமரூபமே. உன்மனதில் நிறுத்துகிறேன். ஸ்ரீபகவானும் நீயும் ஒன்றானபின், எவ்வாறு மறையும்.

# நாமரூபம்

இவ்வாறு ஸ்ரீபகவானுக்கு ஓர் ,, ,, கொடுப்பது ஏன்?

நீயும் ஓர் நாமரூபம் தாங்கி இருக்கிறாய். உன் நாமரூபம் புண்ணிய பாவத்தால் உருவானதாகும். அப்புண்ணியபாவம் ஸ்ரீபகவான் திருவடியை, உன் உடைமையாக பாராட்டியதால் வந்ததாகும். அறியாமையால், தேவனைக் குறைவாக உன்னுடையதாக, பாவம் செய்து புசித்தவைகளையும் புசிப்பவைகளையும் புசிக்கப் போவதையும் சர்வார்ப்பணமாக தியாகம் செய்ய, உன் மனம் பிடிமானத்திற்கு, ஓர் நாமரூப தோற்றம் வேண்டும். நாமரூபம் இல்லையானால், உன் மனம் நம்பாது. ஸ்ரீபகவானை பரம்/அம்சம் கொண்டவனாகும். அது அதி சூட்சுமமானதாகும். ஆகவே அதி சூட்சும பரத்திற்கு, ஓர் அளவற்ற நாமரூபம் உன் திடநம்பிக்கையால் அறிவால் தான் கொடுக்க முடியும். உன் சர்வார்ப்பணத்தால் உன் வினை முடியும். மனு சாதனையால் நீயே ஸ்ரீபகவானாவாய். ஸ்ரீ சத்குரு அருளும் சர்வார்ப்பணத்தால் ஸ்ரீபகவானை பரம் பொருளாகி விடுவாய். இது சத்தியம்.



அம்மா! அப்பா! கணவன்! மனைவி! என குழந்தைகள் (49)
அண்ணன் தம்பி! அக்காள் தங்கை! மாமன் மாமி!
இப்படி உறவு முறையின் பற்றின்
மையே! அவைகளுள் இருக்கும் ஸ்ரீபகவானின் தரிசனம் கிட்டாமல் ஸ்ரீபகவனின் மறைப்பாகிய மாயத்திரையாம்.

(48) மோஹத் தடையாக

அந்த! ஒன்றுக ஆவதற்கு தடை இருப்பது ஏது?

நாமரூபமே தடையாகும். உன் கர்மவினையால் நாமரூபத்தால், சொந்த பந்த பாச பற்றின் விளையும்

,, ,, → அவன் அவர்! இவன் இவர்! அது இது என எவை எவையோ } குண தோஷ பற்றின் விளையும்

,, ,, நான்! என்றல்! எனதின்! மோகப் பற்றின் விளையும்

மேலே கூறிய அனைத்து! நாமரூப தோஷ தோஷ பிணைப்புகளும்! அந்த ஒன்றுக ஆவதற்கு பெரும் தடையாய் உள்ளது என அறிக.

இப்பற்றின் தடைகள்! மன எண்ணத்தால், வினைகள் என்ற வடிவில், மனதை சூழ்ந்து பந்தப்படுத்தி உள்ளன. இவை அனைத்தும், நாமரூப ஸ்ரீபகவானிடம் முழுமையாக செய்யும், சர்வார்ப்பணத்தால் வினை! நாசமாகும். அதாவது நாமரூபம்! நாசமாகும். உன் ஸ்ரீவிஷ்ணு அருளும் பரம்மார்ப்பணத்தால்! இப்பாசப்பிணைப்பை, உண்டாக்கிய

மனம் நாசமாகும் (மனம் மாய்த்தாகும்) வா ஹே

மனம் அழிந்தால் ஜீவன் முக்தி பெறலாம். அழிந்தால் விதேகமுக்தி! என உணர்க.



(50)

பொன்னூசன் ஆகும்
ஆ வ ர ணம்
ஜீவன் ஆகும்
ஆவரணை நாம பேதத்தை
சொல்கிறோம். ஆனால்
பொன்னின் முன் வைத்து
ஆவரணத்தை சொல்வதில்
காரணம் அவரணமயக்கம்
பொன்னின் மறைந்து விட்டது
ஸ்ரீ பகவான் சொல்லி நாம பேதத்தை சொன்னால்
ஆவரணம் மறைந்து விடும்.

(49) **நாமரூபம்**

**நாமம்** / எல்லாம் கடந்து எங்கும்

**நிறைவாய்** / நின்றவன் என்றால், அதன் பொருள் என்ன?

இது சிவ ஞானானுபவ நூலில் வரும், ஓர் **ஸத்தி**
**ய** / வாசகம் ஆகும். இதைச் சற்று கூர்ந்து உணரவும்.
அவ்வாசகம்.

நாமமெல்லாம் கடந்து எங்கும் நிறைவாய் நின்ற.

**தத்துவமாம்** / சிவம் ஆனேன்! உண்மை சொன்னேன் என்பதாகும்.

இங்கு தத்பத வாச்சிய பரமாத்மாவையும் / த்வம் பத
வாச்சிய ஜீவாத்மாவையும்! **உபாதி** (தொடர்)
பேதத்தை நீக்கி, அதாவது மறையாத பொன்னியும்
ஆ வ ர ண த் தை யு ம்! இவ்விரு மறையாத
நா ம மு ம் / நா ம ரூ ப மு ம் / இரண்டையும் நாசம் செய்தால்

**மருஞ்சயதுரதுவோ / அநுபோர்** ஆகும்

அதுவே நீ! நீயே சிவம்! அவமான நாம பேதமும் இல்லை. பொன்
என்ற நாமமும் இல்லை என்பதையே இங்கு குறிப்பிடுகிறார்.
சிவம் ஆனேன் என்பது பரம் பொருளே! குறிப்பிடுகிறார் என உணர்க.



இயக்கமில்; அசைவில்லை உணர்வு மாசு

ஆரம்பமுடிவில்லை

அடை

இருக்கு

அகண்டமான (51)

# மண்!

எப்படி சர்வவியாபகமோ
அதேபோல் அந்த
ஒ ன் று ம்
சர்வ வியாபகமேயாகும்.
அதற்கு தோற்றம் இருப்பு நாசம்
எதுவும் பிரமாணமாக இல்லவே இல்லை.

முக்கிய உணர்வு.

**பொன்!** என்றும் **நாமம்!** ஒன்றே. அதுவேசுன்!
**ஆபரணம்!, நாமம்&ரூபம்!** ஆகும்.
இது ஜீவன் ஆகும்.

இங்கு வரும் ஓர், மகத்திய வாசகம் என்னவென்றால்?
நாமமெல்லாம் கடந்து எங்கும்
நி றை வா ய் நி ன் று,
என்பதாகும்.

இதன் உட் பொருள் (A) ஆபரணம் :- தோற்றம்! (நாம ரூபம்)
இருப்பு! மாற்றம்! மறைவு! என நான்கு நிலைகளாகும்.
(B) பொன் :- தோற்றமும்! இருப்பும்! என இரண்டாகும்
(C) மண் :- இந்த பொன்னும்! அந்த ஆபரணமும்! **நம்**
**மண்ணுக்கு!** அன்னியமாயில்லை.
இம்மண் இருக்கிறேன் என்ற, ஓர் உபசார வசனமாக
உள்ளதே யன்றி உண்மையல்ல.




(52)

உணரும் ஈசனையும் காணும் ஜீவனையும், சுட்டிக்காட்டி, உன் மனம் மயங்காவகைக்கு கொடுக்கப்பட்ட உவமை உபசார வாசகமே மணி ஆகும். ஆகவேதான் நாம சொல்லாம், கடந்து எங்கும் நீக்கமற நிறைவாய் நின்றது என்றார்.

மணிக்கு இருக்கும் நிலையில். அதை உண்டு! என இருப்பு மட்டும் உள்ளது. மணியின் நாமம்! நம் மனதினின் (நம்பும்) நிலைக்கே என உணர்க. அது மணியும் அல்ல. எந்த தோற்றமும் அல்ல. அதை உண்டு எனச் சொல்லும் நிலைக்கு, உபசார வசனமே மணி ஆகும். அப்படியானால் இங்கு, எந்த நாமமும்! சொல்லவே இல்லை. அதுவே மௌனக ஆனந்த நிலையில், ஸ்வயம்! ஜோதி! தோற்றமே! இருக்கிறது! என்ற இருப்பு! (ஈசனுக்கு ரூபம் கையில்) மட்டும் உடையதாகும். ஆகவே இங்கு, பொன் (ஈசன்) என்ற நாமம்! மட்டும் உண்டு. ரூபம் இல்லையென ஸத்தியமாக நம்புவாயாக. ஆகவேதான் நாம சொல்லாம் கடந்தவன் என்றும் நாமம் மட்டும் உடைய ஈசனும்! அது அல்லவென பின் என் அடுத்த வரியில் ஏகத்துவமாம். ஐக்கியம் உணர். என்றும் என்றல் ஆவரணம் மௌனத்துக்கு இல்லையென இல்லை. அப்படியானால் நாமம் அப்பொன் அந்த ஒன்றுக்கு! அன்னியமில்லையென உணர்க.

56 பாபா.


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!